(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT JUDGE , MADURAI.

S.C . No. **323/17**

**DEPOSITION OF PW 16 WITNESS FOR PROSECUTION / DEFENCE**

Name : விஜயேந்திரன்
Father's name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 22.3.18

மு வி **---**

நான் தற்போது மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணி புரிகிறேன்**. 22.3.17** அன்று நீதித்துறை நடுவர் எண் **4** மதுரை அவர்களிடமிருந்து வேண்டுகோள் கடிதமும் **,** கூடல் புதூர் காவல் நிலைய குற்ற எண் **.126/17** ல் சம்பந்தப்பட்ட வழக்கு சொத்துக்கள் நீதிமன்ற முத்திரையிடப்பட்டு ஒரு மரப் பெட்டியுடன் தலைமை காவலர் **1939** முகமது ஜாபர்கான் மூலம் எங்கள் ஆய்வகத்தில் பகுப்பாய்வுக்காக பெறப்பட்டது**.** அம்மரப்பெட்டியிலுள்ள வழக்கு சொத்துக்கள் வரிசை எண் **1)** சிமிண்ட் காரை **2)** சிமிண்ட் காரை **3)** டொரினோ என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட இரண்டு கண்ணாடி குப்பிகள் **4)** சுமார் **40**

செமீ நீளமுள்ள கத்தி **5)** நீலம் மற்றும் வெள்ளை நிற ஜீன்ஸ் பேண்ட் **6)** சிகப்பு நிற முழுக்கை சட்டை **7)** பச்சை கோடு போட்ட பிங் நிறமுள்ள முழு கை சட்டை **8)** பிரவுன் பேண்ட் **9)** பிரவுன் ஜட்டி **10)** சுமார் **31** செமீ நீளமுள்ள கத்தி **11)** சிகப்பு குறுக்கு கோடு போட்ட வெள்ளைநிற துண்டு ஆகியவற்றை பகுப்பாய்வு செய்ததில் **1, 4** முதல் **10** இவ்வற்றிலுள்ள சொத்துக்களில் ரத்தம் கண்டறியப்பட்டது**.** **2, 3,** மற்றும் **11** ல் ரத்தம் இல்லை என உயிரியியல் அறிக்கை மதுரை நீதித்துறை நடுவர் **4** அவர்களுக்கு அனுப்பப்பட்டது**.** அந்த உயிரியியல் அறிக்கை அசாஆ **18.** மேலும் ரத்தம்பட்ட பொருட்களில் பகுதி பொருட்கள் குருதி வடி நீரியியல் பிரிவில் ஆய்வு செய்யப்பட்டது**.** **1, 4** முதல் **10** ஆகியவற்றிலுள்ள ரத்தம் மனித ரத்தம் என்றும் **, 1, 6** முதல் **10** இவற்றிலுள்ள ரத்தம் **A** வகை ரத்த பிரிவை சார்ந்தது**.** **4, 5** ஆகியவற்றிலுள்ள ரத்தத்தின் வகையை அறுதியிட்டு கூற இயலவில்லை என குருதி வடி நீரியியல் அறிக்கை மதுரை நீதித்துறை நடுவர் எண் **4** அவர்களுக்கு அனுப்பப்பட்டது**.** குருதி வடி நீரியியல் அறிக்கை அசாஆ **19.** என்னை ஆய்வாளர் விசாரித்தார்**.**

கு வி **--** எதிரிகள் தரப்பில்

இல்லை**.**